[1973 நவம்பர் 22

Organisation and Methods Cell in the Secretariat

* 31 Q.—THIRUVALARGAL V. ISVARMURTI AND M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have set up an Organisation and Methods Cell in the Secretariat; and

(b) if so, the details thereof?

தலைமைச் செயலகத்தில் நிர்வாக அமைப்பு—நடைமுறைப் பிரிவு

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி & திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தலைமைச் செயலகத்தில் நிர்வாக அமைப்பு-நடைமுறைப் பிரிவு ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) நிதித் துறையின்கீழ், நிர்வாக அமைப்பு நடைமுறைகள் பிரிவு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இப்பிரிவு, முதுநிலைப் பகுப்பாய்வாளர் இருவர், நேரிடைப் பணிப் பகுப்பாய்வாளர் ஐவர், செலவுப் புள்ளி விவரக் கணக்கு அதிகாரி ஒருவர் ஆகியோருடனும் அவசியமான துணைப்பணியாளர்களுடனும் செயல்பட்டு வருகிறது. பின்னர், இந்தக் குழுவுடன், முதுநிலைப் பகுப்பாய்வாளர்—நிர்வாகப் பொறியாளர் ஒருவர், ஒரு உதவிப் பொறியாளர், நேரிடைப் பணிப் பகுப்பாய்வாளர்—வரையாளர் ஒருவர் ஆகியோரடங்கிய பொறியியல் பிரிவு ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. நிர்வாக நடைமுறைகளையும், பழக்கங்களையும் ஆராய்ந்து, அரசுத் துறைகளில் பின்பற்றும் நடைமுறைகளைச் சீரமைப்பதற்கான வழிவகைகளைக் குறித்து ஆலோசனை நல்கவும், இயலும் இடங்களிலெல்லாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு செய்வதற்கும் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவு, "செயல் திட்ட மதிப்பீடு" போன்ற பொறியியல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்கிறது. ஐதராபாத்திலுள்ள நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் ஆலோசனை செய்முறை ஆராய்ச்சிப் பிரிவால், நிர்வாக அமைப்பு நடைமுறைகள் பற்றிய கோட்பாடுகளிலும், செயல்முறைகளிலும் இக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. "செயல் திட்ட மதிப்பிடுதல்—மறு ஆய்வு உத்தி" (PERT பொருள் நிர்வாகம்" (Materials Management) குறித்த தேசிய உற்பத்தித்திறன் குழு நடத்தும் பயிற்சிகளிலும் இவர்கள் பயிற்சி

1973 நவம்பர் 22]

யளிக்கப்பட்டுள்ளார்கள். இப்பிரிவு அரசின் பல்வேறு துறைகள் குறிப்பிட்டுள்ள பல திட்டங்களில் ஏற்கனவே ஆராய்ச்சிகள் நடத்தி, அறிக்கைகளை அனுப்பியுள்ளது. ஆய்வுக்காகக் கூடுதலாகப் பல திட்டங்களை இப்பிரிவு எடுத்துக்கொண்டுள்ளது. இந்த ஆய்வுப்பணிகள் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த விடை விரிவாக இருக்கிறது. ஆனால் தெளிவாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. சுருக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, இதனால் நிர்வாகச் சிக்கனம் ஏற்படுமா, நிர்வாகச் சிக்கனம் உண்டாக்குவதற்காகத் தான் இந்தக் குழு செயல்படுகிறதா என்று அறிந்துகொள்ள விரும்புவதோடு, இப்போது நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது, அந்தக் கமிஷன் இதன் ஆலோசனையின் பேரில் தான் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சப்ளிமெண்டரி சுருக்கமாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அறிய விரும்புவது, இந்த அமைப்பின் மூலமாக சிக்கனம் கடைப்பிடிக்கப்படுமாவென்பது. சிக்கனமான முறையில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற அடிப்படையிலும், நவீன நிர்வாக அமைப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற அடிப்படையிலும் தான் 1—8—1970-லிருந்து நிதித் துறையிலே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு அதனுடைய செயல் முறைகள் இப்போது வடிவம் பெற்று வருகின்றன. அதனுடைய சிபாரிசுகள் பலவற்றை இந்த அரசாங்கம் நிறைவேற்றியும், சிலவற்றைப் பரிசீலித்துக்கொண்டும் இருக்கிறது.

Economy in Government Departments

*32 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a High Level Committee was appointed by the Government to effect economy in Government Departments; and

(*b*) if so, the recommendations of the above Committee?